FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319465

1. District : மாவட்டம் Madurai PS: VOAC காவல்நிலையம் Year: 2026 ஆண்டு FIR No. 03/2026 முத.அ. எண் Date: 25.03.2026 நாள்

2. (i) Act சட்டம்: Pc Act 1988 as amended (ii) Act சட்டம்: by the Pc (amendment) (iii) Act சட்டம்: Act 2018. Sections பிரிவுகள்: U/s. 7(a) of Pc Act 1988 Sections பிரிவுகள்: as amended by the Sections பிரிவுகள்: Pc (amendment) Act 2018

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் ① 06.03.2026 -
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Date to : நாள் வரை ② 17.03.2026 at 18.00 hrs ③ 18.03.2026 at 16.45 hrs Time to : நேரம் வரை ④ 20.03.2026 at 10.45 hrs ⑤ 24.03.2026 at 17.00 hrs & 20.30 hrs ⑥ 25.03.2026 at 10.30 hrs

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25.03.2026 Time : நேரம் 11.45 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 25.03.2026 Time : நேரம் 12.45 hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Typed Complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் South West 15KM

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி O/o AE TANGEDCO, Pasumalai, Office at Thirunagar, Madurai.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr. U. Saravanakumar (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr. Udayar

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 05.06.1982 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Mason (g) Address : முகவரி Plot NO: 14-S, Theyagi Kandhan Servai Nagar 4th Street, Madakulam Main Road, Madurai

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) Tr. Thirupathi, Assistant Engineer, TANGEDCO, Pasumalai, Office at Thirunagar, Madurai

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10 Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு என் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate Sheet attached Pages 3 to 8

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி. அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

2. தகவல் தாரர். 25/03/2026

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court: 25.03.2026 13.45hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும். நேரமும்

Name: பெயர் T. Suriyakala
Rank: நிலை Inspector of Police No. எண்
VQ AE, Madurai
(25.03.2026)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

இன்று 25.03.2026-ஆம் தேதி காலை 11.45 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்த போது, மதுரை மாடக்குளம் மெயின்ரோடு, தியாகி கந்தன்சேர்வை நகர் 4வது தெரு, பிளாட் எண் 14S என்ற முகவரியில் வசிக்கும் உடையார் மகன் திரு. சரவணக்குமார் என்பவர் நிலையத்தில் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு ஒன்றை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் U. சரவணக்குமார், த/பெ. உடையார், பிளாட் எண் 14S, தியாகி கந்தன்சேர்வை நகர் 4வது தெரு, மாடக்குளம் மெயின்ரோடு, மதுரை-03. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. அய்யா, நான் தியாகி கந்தன்சேர்வை தெருவில் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் 10-ஆம் வகுப்பு வரை படித்து முடித்து விட்டு, கொத்தனார் வேலை செய்து வருகிறேன். எனக்கு சொந்தமான 4 சென்ட் இடம் மதுரை சௌராஷ்டிரா கல்லூரிக்கு எதிரில் திருப்பரங்குன்றம் கிராம ரீசர்வே எண். 56/22A, பிளாட் நம்பர் 2, விளாச்சேரி மெயின்ரோட்டில் உள்ளது. அந்த இடத்திற்கு மேலே உயர் அழுத்த மின் கம்பி சென்று கொண்டு இருக்கிறது. அந்த இடத்தில் வீடு கட்ட வேண்டும் என்றால் அந்த வயரை மாற்றி அமைக்க வேண்டும். அதன் காரணமாக கடந்த 02.01.2026-ந் தேதி அன்று மின்சார வாரியத்திற்கு ஆன்லைன் அப்ளிகேசன் மூலமாக மாலையில் எனது பெயரில் விண்ணப்பித்தேன். அந்த ஆன்லைன் அப்ளிகேசனில் எனது செல்போன் எண் 8825778520யை குறிப்பிட்டிருந்தேன். அந்த விண்ணப்பத்தின் எண் 2000505101268 ஆகும். அதற்காக ரூ.2,215/-யை 15 நாட்களுக்குள் கட்ட வேண்டும் என எனது செல்போனிற்கு குறுஞ்செய்தி வந்தது. அதன்படி நான் கடந்த 07.01.2026-ந் தேதி அன்று ஆன்லைன் மூலம் ரூ.2,215/- கட்டினேன். அது சம்மந்தமாக என்னை யாரும் தொடர்பு கொள்ளாத காரணத்தினால் நான் கடந்த 22.01.2026-ந் தேதி காலையில் சுமார் 11.00 மணிக்கு என்னுடைய இடத்திற்கான ஏரியா திருநகர் 6வது பஸ் ஸ்டாப்பில் உள்ள பசுமலை மின்சார அலுவலகத்திற்கு சென்று விசாரித்து, அங்கு பணியிலிருந்த AE திரு.திருப்பதி அவர்களை சந்தித்து என்னை பற்றி விபரங்கள் கூறி எனது செல்போனிற்கு வந்த குறுஞ்செய்தியை அவரிடம் காண்பித்தேன். அவர் அதனை படித்துவிட்டு, என்னிடம் அவர் எனது இடத்தை வந்து பார்வையிடுவதாக கூறி என்னை அங்கு சிறிதுநேரம் காத்திருக்கும்படி கூறினார். அதன்படி நான் சிறிதுநேரம்

காத்திருந்தேன். பிறகு அன்று காலை சுமார் 11.45 மணிக்கு AE திரு.திருப்பதி மற்றும் அவர் அலுவலகத்தில் CI ஆக பணிபுரியும் திரு.ஜெயப்பிரகாஷ் ஆகியோர் அவர்களது இருசக்கர வாகனத்தில் எனது இருசக்கர வாகனத்தை பின்தொடர்ந்து எனது இடத்திற்கு வந்து அதனை பார்வையிட்டார்கள். பிறகு AE திரு.திருப்பதி அவர்கள் எனது இடத்திற்கு மேலே செல்லும் உயர் அழுத்த மின்சார கம்பியை மாற்றி தருவதற்கு தான் எஸ்டிமேட் தயார் செய்து AD மற்றும் EE ஆகியோர் எஸ்டிமேட்-க்கு ஒப்புதல் வழங்கிய பின்னர் நான் உங்களுக்கு டிமாண்ட் நோட்டீஸ் வழங்குவேன். நான் டிமாண்ட் நோட்டீஸ் வழங்கியவுடன் நீங்கள் எஸ்டிமேட் பணத்தை செலுத்த வேண்டும். பிறகு நான்தான் உங்கள் இடத்திற்கு மேலே செல்லும் உயர் அழுத்த மின் கம்பியை மாற்றி தர ஏற்பாடு செய்வதற்கான வேலையை பார்ப்பேன், அதற்கு கொஞ்சம் செலவாகும் என்று கூறி AE திரு.திருப்பதி அவர்கள் என்னிடம் அவரது செல்போன் எண் 9655600379 மற்றும் CI திரு.ஜெயப்பிரகாஷ் அவர்களது செல்போன் எண் 6379860391 ஆகியவற்றை என்னிடம் தந்துவிட்டு சென்றார். அதன்பிறகு நான் AE திரு.திருப்பதி மற்றும் CI திரு.ஜெயபிரகாஷ் ஆகியோரிடம் எனது இடத்திற்கு மேலே செல்லும் உயர் அழுத்த மின்சார கம்பியை மாற்றி தருவது சம்பந்தமாக சிலதடவை போனில் பேசியுள்ளேன். அவர்களும் என்னிடம் போனில் பேசினார்கள். சிறிது நாட்கள் கழித்து 29.01.2026-ந் தேதிக்கு மேல் எனது இடத்தை அரசரடி தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகத்திலிருந்து AD மற்றும் EE திருமதி.லதா ஆகியோர் பார்த்து விட்டு சென்றதாக AE திரு.திருப்பதி அவர்கள் என்னிடம் தெரிவித்தார். பிறகு 06.03.2026-ந் தேதி AE திரு.திருப்பதி அவர்களை திருநகர் 6வது பஸ் ஸ்டாப்பில் உள்ள அவரது மின் அலுவலகத்தில் வைத்து நான் நேரில் சந்தித்து, எனது விண்ணப்பம் சம்பந்தமாக கேட்டேன். அதற்கு AE திரு.திருப்பதி அவர்கள், எஸ்டிமேட் ஒப்புதல் வழங்கியவுடன் உனது இடத்தின் மேலே செல்லும் உயர்அழுத்த மின் கம்பியை மாற்றித்தர ஏற்பாடு செய்து தருகிறேன். அதற்கு எனக்கு ரூ.10,000/- கொடுக்க வேண்டும் என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் அவரிடம் ரூ.10,000/- அரசுக்கு கட்ட வேண்டிய பணமா என்று கேட்டேன். அதற்கு அவர் இல்லை அந்த பணம் தனது செலவிற்கு தனியாக கொடுக்க வேண்டிய பணம் என்றும், அதை கொடுக்கவில்லை என்றால், எனது இடத்திற்கு மேலே செல்லும் உயர் அழுத்த மின் கம்பியை மாற்ற பல காலங்கள் ஆகும் என்றும், அதற்காக அலைந்து கொண்டே இருக்க வேண்டும் என்றும் கூறினார். நானும் சரியென்று வந்து

விட்டேன். பிறகு 13.03.2026-ந் தேதி அன்று எனது செல்போன் எண்ணிற்கு தமிழ்நாடு மின்சார வாரியத்திலிருந்து மாலையில் குறுஞ்செய்தி வந்தது. அதில் அந்த உயர் அழுத்த அந்த மின் கம்பியை மாற்றுவதற்காக ரூ.2,96,310/- யை 15 நாட்களுக்குள் கட்ட வேண்டும் என குறிப்பிட்டிருந்தது. நான் இது சம்மந்தமாக 17.03.2026-ந் தேதி மாலை சுமார் 06.00 மணி அளவில் எனது செல்போன் எண்ணிலிருந்து AE திரு.திருப்பதி அவர்களின் செல்போன் எண்ணில் தொடர்பு கொண்டு அவரிடம் பேசியபோது, அவர் என்னிடம் உங்களுக்கான எஸ்டிமேட்-யை AD மற்றும் EE ஆகியோர் ஒப்புதல் வழங்கி விட்டார்கள். நான் உங்களுக்கு கொடுக்க வேண்டிய டிமாண்ட் நோட்டீஸ் தயார் செய்து விட்டேன், அதில் குறிப்பிட்டுள்ள ரூ.2,96,310/-யை ஆன்லைன் மூலமாக கட்ட வேண்டும் என்றும், தான் ஏற்கனவே கேட்ட பணம் ரூ.10,000/- தனக்கு கொடுக்க வேண்டும் என்றும் என்னிடம் மீண்டும் கேட்டார். அதற்கு நான் அவரிடம், என்னிடம் அவ்வளவு பணம் இல்லை சிறிது குறைத்து கொள்ளுங்கள் என்று அவரிடம் கெஞ்சி கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் ரூ.10,000/-யை குறைக்க முடியாது, அதனை ரெடி செய்து விட்டு என்னை வந்து பார்த்து அப்பணத்தை கொடுத்து விடுங்கள், அதற்குள் நான் வழக்கமாக தபாலில் அனுப்புவது போல் உங்கள் டிமாண்ட் நோட்டீஸை உங்களுக்கு அனுப்புகிறேன் என்று கூறினார். பின்பு 18.03.2026 அன்று மாலை சுமார் 04.45 மணியளவில் AE திரு.திருப்பதி அவர்கள் அவரது செல்போன் எண்ணிலிருந்து எனது செல்போன் எண்ணிற்கு தொடர்பு கொண்டு அவர் என்னிடம், தான் கேட்ட பணம் ரூ.10,000/- என்னாச்சு என கேட்டார். அதற்கு நான் அவரிடம், பணம் ஏற்பாடு செய்வது சிரமமாக உள்ளது என்று கூறினேன். அதற்கு அவர் என்னிடம் ரூ.10,000/-த்தை ஏற்பாடு செய்து விட்டு, நாளை (19.03.2026) அரசு விடுமுறை அதனால் நாளை மறுநாள் 20.03.2026ந் தேதி அன்று காலையில் செல்போனில் பேசுங்கள் எனக் கூறினார். பின்னர் 20.03.2026-ஆம் தேதி காலை சுமார் 10.45 மணியளவில் நான் எனது கைப்பேசியிலிருந்து AE திருப்பதி அவர்களின் கைபேசியில் தொடர்பு கொண்டு பேசியபோது அவர், உங்களது டிமாண்ட் நோட்டீஸை தபாலில் அனுப்பியுள்ளேன். அது கிடைத்தவுடன், அதில் குறிப்பிட்டு உள்ள பணம் ரூ.2,96,310/- யை ஆன்லைனில் கட்டி விட்டால், நான் உங்ளது இடத்திற்கு மேலே செல்லும் உயர் அழுத்த மின் கம்பியை மாற்றி தர விரைவில் ஏற்பாடு செய்வேன் என்று கூறிவிட்டு, அவர் கேட்ட லஞ்சப்பணம் ரூ.10,000/-

என்னாச்சு என்று கேட்டார். அதற்கு நான், பணம் புரட்ட சிரமமாக உள்ளது என்று கூறினேன். அதற்கு அவர், பணத்தை ஏற்பாடு செய்து விட்டு, டிமாண்ட் நோட்டீஸ் கிடைத்தவுடன் தன்னை நேரில் வந்து சந்திக்குமாறு கூறினார். நானும் சரி என கூறிவிட்டேன். பின்னர் 21.03.2026ம் தேதி காலை சுமார்.10.30 மணியளவிலும் 11.00 மணியளவிலும் இரவு சுமார் 09.00 மணியளவிலும் AE திரு.திருப்பதி அவர்கள் என்னை கைபேசியில் தொடர்பு கொண்டு டிமாண்ட் நோட்டீஸ் கிடைத்துவிட்டதா என கேட்டார். நான் அவரிடம் டிமாண்ட் நோட்டீஸ் இன்னும் கிடைக்க வில்லை என கூறினேன். அதற்கு அவர் டிமாண்ட் நோட்டீஸ் கிடைத்தவுடன் அதில் குறிப்பிட்டுள்ள பணத்தை கட்டிவிட்டு, அவர் கேட்ட பணத்துடன் அவரை நேரில் வந்து பார்க்கும்படி கூறினார். பின்னர் 23.03.2026ம் தேதி நான் கொடிமங்கலத்தில் கேதத்திற்கு சென்றுவிட்டு இரவு வீட்டிற்கு வந்த போது பசுமலை EB ஆபிஸிலிருந்து AE திருப்பதி அவர்கள் அனுப்பிய டிமாண்ட் நோட்டீஸ் தபால் மூலம் கிடைத்திருந்தது. பின்னர் AE திருப்பதி அவர்கள் சொன்னபடி 24.03.2026ம் தேதி மாலை சுமார் 05.00 மணியளவில் அவரது அலுவலகத்தில் வைத்து அவரை சந்தித்து டிமாண்ட் நோட்டீஸ் கிடைத்த விபரத்தை கூறினேன். உடனே அவர் நான் கேட்ட பணம் ரூ.10,000/- என்னாச்சு என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம் பணம் இன்னும் ரெடியாக வில்லை என்று கூறினேன். அதற்கு அவர் டிமாண்ட் நோட்டீஸில் குறிப்பிட்டுள்ள அரசு கட்டணம் ரூ.2,96,310/-யை ஆன்லைன் மூலம் உடனே கட்ட சொன்னார். நானும் சரி என்று கூறிவிட்டு இசேவை மையத்திற்கு சென்று அரசு கட்டணத்தை செலுத்த முயன்ற போது செலுத்த முடியவில்லை. அதனால் நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன் பின்னர் அன்று இரவு சுமார் 08.30 மணியளவில் AE திருப்பதி அவர்கள் என்னை எனது கைபேசியில் தொடர்பு கொண்டு அரசு கட்டணத்தை செலுத்தியாச்சா என கேட்டார். நான் அவரிடம் இசேவை மையம் மூலம் பணம் செலுத்த முடியவில்லை என்றும் நாளை (25.03.2026) காலையில் வங்கி மூலம் அரசு கட்டணத்தை செலுத்திவிடுவதாக தெரிவித்தேன். அதற்கு AE திருப்பதி அவர்கள் அரசு கட்டணத்தை செலுத்திவிட்டு தான் கேட்ட பணம் ரூ.10,000/-த்துடன் வந்து திருநகரில் உள்ள தனது அலுவலகத்தில் தன்னை சந்தித்து கொடுத்தால் தான் எனது இடத்திற்கு மேலே செல்லும் உயர் அழுத்த மின் கம்பியை மாற்றி தர விரைவில் ஏற்பாடு செய்து தர முடியும் என கண்டிப்பாக கூறிவிட்டார். நானும் சரி என்று கூறிவிட்டேன். பின்னர் இன்று (25.03.2026) காலை வசந்த நகர் SBI வங்கியில்

இருக்கும் போது, AE திருப்பதி அவர்கள் என்னை காலை சுமார் 10.30 மணியளவில் கைபேசியில் தொடர்பு கொண்டு அரசு கட்டணத்தை செலுத்தியாச்சா என்று கேட்டார். நான் இன்னும் செலுத்த வில்லை, இன்று கட்டணத்தை கட்டி விடுகிறேன் என்று கூறினேன். அதற்கு அவர் என்னிடம், கட்டணத்தை செலுத்தி விட்டு, நான் கேட்ட பணம் ரூ.10,000/- ரெடி செய்து விட்டு, என்னிடம் போனில் பேசிவிட்டு, பணத்தை கொண்டு வந்து கொடு என்று கூறினார். பின்னர் நான் SBI வங்கியில் நெட் பேங்கிங் ஓபன் செய்து, எனது கைபேசி மூலம் அரசு கட்டணமான பணம் ரூ.2,96,310/-த்தை செலுத்தினேன். பின்னர் AE திருப்பதி அவர்கள் அவரது வேலையை செய்ய என்னிடம் லஞ்சமாக பணம் ரூ.10,000/- கேட்ட விபரத்தை எனது மனைவி விஜயாவிடம் கூறி வருத்தப்பட்டேன். எங்களுக்கு லஞ்சம் கொடுப்பதற்கு விருப்பம் இல்லை. நானே கூலிக்கு கொத்தனார் வேலை செய்கிறேன், பணம் கொடுக்கவில்லை என்றால் AE வேலை செய்ய மாட்டார். எனவே AE திரு.திருப்பதி, எனது இடத்தின் மேலே செல்லும் உயர்அழுத்த மின் கம்பியை மாற்றி தருவதற்கு ஏற்பாடு செய்துதர லஞ்சமாக ரூ.10,000/- கேட்கும் பசுமலை AE அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க இந்த புகார் மனுவை தயார் செய்து அத்துடன் நான் விண்ணப்பித்த ஆன்லைன் அப்ளிகேசனுக்காக 1) கடந்த 07.01.2026-ந் தேதி கட்டணமாக ரூ.2,215/- நான் செலுத்திய மின்கட்டண ரசீது, 2) எனது இடத்திற்கு பொட்டல் வரியாக மதுரை மாநகராட்சிக்கு நான் கட்டிய ரூ.14,902/-க்கான ரசீது 115/412/1/25-26/0009014, 3) எனது இடத்திற்கான பட்டா எண் 11590 மற்றும் 4) FMB, 5) எனது இடத்திற்கான திருப்பரங்குன்றம் சார்-பதிவக கிரைய ஆவண எண். 7663/2025, 6) AE திருப்பதி அவர்கள் எனக்கு அளித்த 13.03.2026 தேதியிட்ட டிமாண்ட் நோட்டீஸ், 7) 25.03.2026-ஆம் தேதியன்று ஆன்லைனில் ரூ.2,96,310/-க்கான செலுத்தியதற்கான ரசீது எண். PGNSBI846479882 ஆகியவற்றின் நகல்களை இணைத்துள்ளேன். அத்துடன் AE திரு.திருப்பதி அவர்கள் என்னிடம் லஞ்சமாக கேட்ட ரூ.10,000/-யை கொண்டு வந்துள்ளேன். அவர்மீது சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கும் படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (ஒ-ம்) XXXXXX (உ.சரவணக்குமார்) 25/03/2026.

Sir, Received the typed complaint today on 25.03.2026 at 11.45 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be

genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Directorate of Vigilance and Anti-Corruption, Chennai and registered a case in Madurai V&AC Cr. No. 03/2026, u/s. 7 (a) of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 12.45 hrs and took up investigation. Sd./-XXXXXX (T.Suriyakala) 25.03.2026, Inspector of Police, V&AC, Madurai.

Original FIR along with original typed complaint of Tr.P.Saravanakumar, S/o.Udaiyar, Plat No. 14S, Thiyagi Kandan Servai Nagar 4th Street, Madakulam Main Road, Madurai along with Photo copies of Online Payment receipt for Online Application No.2000505101268, Pottal Tax Receipt No. 115/412/1/25-26/0009014 of Madurai Corporation, Thirupparankundram village Patta No.11590562 & FMB, Thirupparankundram Sub-registrar Sale deed Document No. 7663/2025, Demand Notice and Online receipt No. PGNSBI846479882, dt: 25.03.2026 are herewith enclosed and submitted to the Hon'ble Principal District Judge, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

(T. Suriyakala) 25.03.2026
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.